**2020ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க விளக்கக் குறிப்பு**

இலங்கை மத்திய வங்கி

2020 ஏப்பிறல் 24

**கொவிட்-19 பாதிப்பிற்குட்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு உதவுவதற்கான நிவாரண வழிமுறைகள் தொடர்பான 2020ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க சுற்றறிக்கை**

**மற்றும்**

**கொவிட்-19இன் தாக்கத்திற்குள்ளான தனிப்பட்டவர்கள் மற்றும் சுயதொழில்புரிவோர் உள்ளிட்ட வியாபாரங்களுக்கு ஆதரவளிப்பதற்கான ரூ.50 பில்லியன் ஆறுமாத மீள்நிதியிடல் தொடர்பான 2020ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க சுற்றறிக்கை என்பனவற்றிற்கான பொருள் விளக்கங்கள்**

வேறுபட்ட கம்பனிகள் அவற்றிற்கு வழங்கப்பட்ட பொதுவான கடன்களுக்குப் புறம்பாக, வேறுபட்ட கடன் வகைகள் அல்லது “தவணைக் கடன்கள்”; குத்தகைகள் போன்ற வேறுபட்ட பெயர்களைப் பயன்படுத்தியிருப்பது அவதானிக்கப்பட்டிருப்பதுடன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் அத்தகைய வகையிலான வசதிகளுக்கு சட்ட இசைவுத் தாமதங்களை வழங்குவதற்கு மறுத்து, அத்தகைய கடன்கள் குறிப்பிட்ட சுற்றறிக்கைகளில் உள்ளடக்கப்படவில்லை எனத் தெரிவிப்பதாக அநேக வாடிக்கையாளர்கள் தெரிவித்த முறைப்பாடுகள் எமக்கும் மத்திய வங்கி முகாமைத்துவத்திற்கும் கிடைத்திருக்கின்றன.

இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கைகளில் அத்தகைய வேறுபட்ட பெயர்கள் குறிப்பிடப்பட்டிருக்காவிடினும் கூட, இவ்வசதிகள் 2020ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2ஆம் பிரிவில் அடையாளம் காணப்பட்ட துறைகளுக்காக பெறப்பட்டிருப்பின், அத்துடன் தனிப்பட்டவர்களின் வருமானம்/ வியாபாரம் கொவிட்-19 இனால் உண்மையில் பாதிக்கப்பட்டு அதன் பொருட்டு ஆட்கள்/ வியாபாரங்கள் அந்நோக்கங்களுக்காக வசதிகளைப் பெற்றமைக்குப் போதுமான ஆவணச்சான்றுகள் இருக்குமாயின், அவ்வாடிக்கையாளர்கள் இக்கடன் இசைவுத்தாமதத்திற்கு தகைமையுடையவர்களாவர். அதாவது சுற்றுலாவுடன் தொடர்பான நடவடிக்கைகள் பற்றி சுற்றறிக்கையில் குறிப்பிடப்படாத போதும் அந்நடவடிக்கைகளுக்காக வாடிக்கையாளர்கள் வசதிகளைப் பெறமுடியும். வாடிக்கையாளர்கள் சுற்றுலா தொடர்பான நடவடிக்கைகளுக்காக வசதி பெறப்பட்டு அவரின் வருமானம் தற்போதைய சூழ்நிலையினால் பாதிக்கப்பட்டிருப்பின் அவர் கடன் இசைவுத்தாமதத்திற்குத் தகைமையுடையவராவர்.